For Private Circulation Only

புதிய தலைமுறை அறக்கட்டளை

# "வள்ளி"

உங்களுடைய சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய குறித்த செய்தி மடல்
(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

அகமும் புறமும் தூய்மையாகட்டும் ! அதன்வழி அன்பும் புறமும் தழைத்தோங்கட்டும் !

முனைவர். ப. சத்தியநாராயணன்
நிறுவனர் – அறங்காவலர்
புதிய தலைமுறை அறக்கட்டளை

இதழ் - 11 ஜனவரி & பிப்ரவரி 2023

## கொரோனா... உஷார்...


உலகெங்கும் இப்போது கொரோனா குறித்த அச்சம் மீண்டும் தலை தூக்கி உள்ளது. இந்தியாவிலும் வைரஸ் பாதிப்பை தடுக்க அரசு பல நடவடிக்கையில் இறங்கி உள்ளது இதற்கிடையே சீனாவை அலறவிடும் புதிய பி.எப்.7 வகை கொரோனாவின் அறிகுறிகளை நாம் பார்க்கலாம்.

ஒட்டுமொத்த உலக நாடுகளும் கொரோனா பாதிப்பில் இருந்து கிட்டத்தட்ட மீண்டு விட்டது. உலக மக்களும் மெல்ல மெல்ல இயல்பு நிலையை நோக்கி திரும்பி வந்தனர். சீனாவில் மீண்டும் கொரோனா பரவல் உச்சம் தொட்டுள்ளது, அங்கு ஒரு நாளைக்கு சுமார் பத்து லட்சம் பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்படுவதாக ஒரு அறிக்கை கூறுகிறது. மருத்துவமனைகள் அனைத்தும் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றது. கொரோனா பாதிப்பு அதிகரிக்க அங்கு பி.எப்.7 வகை கொரோனா தான் முக்கிய காரணம் என்று அறியப்படுகிறது. இது உருமாறிய ஒமிக்கிரான் வகை கொரோனாவின் உட்பிரிவாகும்.


இந்தியாவிலும் குஜராத் மற்றும் ஒடிசாவில் இந்த பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. பத்துக்கும் குறைவானவர்களுக்கே இந்த பாதிப்பு கண்டறியப்பட்டாலும் கூட, மத்திய மாநில அரசுகள் இதை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது. இதன் காரணமாக ஒமிக்கிரான் குறித்த தொடர்ச்சியான ஆலோசனை நடத்தி வழிகாட்டுதல்களை வெளியிட்டு வருகிறது.

### அறிகுறிகள்

மற்ற கொரோனா வகைகளைப் போலவே இந்த பி.எப்.7 கொரோனாவும் மேல் சுவாசப்பகுதியில் நோய் தொற்று ஏற்படுத்துகிறது. மார்பின் மேல் பகுதிகள் தொண்டைக் அருகில் இதன் தாக்கம் இருக்கும். காய்ச்சல், தொண்டைப்புண், மூக்கு ஒழுகுதல் மற்றும் இருமல் ஆகியவை இந்த பி.எப்.7 வகை கொரோனாவின் பொதுவான அறிகுறிகளாக உள்ளன. சிலருக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட வயிறு தொடர்பான பிரச்சனைகள் ஏற்படும் இதை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது.



அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு சென்று தங்களை பரிசோதித்து கொள்ள வேண்டும். மருத்துவர் ஆலோசனையின்றி தாங்களாகவே மருந்து கடைகளில் மருந்து மாத்திரைகளை வாங்கி உட்கொள்ளக்கூடாது. மருத்துவர்களின் அறிவுறுத்தல் படி மருந்துகளை உட்கொள்ள வேண்டும். இந்த முறையை கடைப்பிடித்தால் நாம் கொரோனாவை தவிர்க்கலாம்.



## "ஒரு மருத்துவ மாணவரின் அனுபவங்கள்"



டாக்டர். ஸ்வேதா மொகண்டி

நான் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வருகிறேன். எனது பிறந்தநாளுக்கு மூன்று நாட்களே உள்ள நிலையில் நான் எஸ்.ஆர்.எம். கல்லூரியில் சேர்ந்தேன். என் வாழ்வில் முதல்முறையாக நான் என் வீட்டையும் குடும்பத்தையும் விட்டு வெகு தூரம் வந்து விட்டேன். முதல் சில மாதங்களில் நான் மிகவும் ஏக்கமாக இருந்தேன், வீட்டிற்கு திரும்பச் செல்ல விரும்பினேன், ஆனால் காலப்போக்கில் எனது



டாக்டர். யுரிதா

நான் மேற்கு வங்காளம் மாநிலத்தில் இருந்து வருகிறேன். செப்டம்பர் 7, 2017 அன்று நான் பொத்தேரில் உள்ள எஸ்.ஆர்.எம். கல்லூரியை அடைந்தேன். பசுமையான இயற்கைச் சூழல் என்னை அன்புடன் வரவேற்றது, எனது முதல் நாளில் விநாயகர் பெருமானின் ஆசிகளைப் பெற்றுக் கொண்டு என் நினைவில் உள்ளதை பகிர்ந்து கொள்கிறேன். டாக்டர்கள் தங்கள் அழகான அனுபவத்தை என்னிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்......

## “ஒரு மருத்துவ மாணவனின் அனுபவங்கள்”

### டாக்டர். ஸ்வேதா மொகண்டி

பேராசிரியர்களையும் எனது நண்பர்களையும் எனது குடும்பமாக நான் நினைக்க ஆரம்பித்தேன். விடுதி வாழ்க்கை என்னால் மறக்க முடியாத ஒன்று நாங்கள் படிப்பது, சாப்பிடுவது, பேசுவது, தூங்குவது எல்லாவற்றையும் ஒன்றாக செய்வோம்.

எங்களுடைய சிறப்பான மற்றும் மோசமான தருணங்களில் நாங்கள் ஒருவருக்கு ஒருவர் ஆறுதலை பகிர்ந்து கொண்டோம். விடுதியில் இருப்பது எனக்கு சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையின் பாடங்களை கற்றுக் கொடுத்தது. இப்போது எஸ்.ஆர்.எம். கல்லூரியில், எனக்கு மிகக் குறைந்த நேரமே உள்ளது. இந்தக் கல்லூரியில், எனது பயணத்தைப் பற்றியும் அதைவிட இந்த பயணத்தின் போது நான் சந்தித்த அற்புதமான மனிதர்கள் பற்றியும் நினைத்துக் கொண்டிருக்கின்றேன்.

என்னால் முடியும் என்று நான் நினைக்காத எனது திறமைகளை ஆராய்ந்து, என்னைப் பற்றிய விஷயங்களை கற்றுக் கொள்ள முடிந்தது. இந்தக் கல்லூரியை விட்டு வெளியேறுவது கடினம். ஆனால், இந்த கல்லூரியில் இருந்த காலகட்டத்தில் தன்னம்பிக்கையையும், தைரியமாகவும் எப்போதும் ஆர்வமாகவும் இருக்கும் திறனை பெற்றுள்ளேன். எனவே எனது எதிர்காலம் எனக்கு என்னவாக இருக்கும் என்பதை பார்க்க நான் ஆவலாக உள்ளேன். மேலும் எஸ்.ஆர்.எம். கல்லூரியை எப்பொழுதும் பெருமைப்படுத்தும் விதத்தில் நடந்துக்கொள்வேன்.

### டாக்டர். யுரிதா

முதல் ஆண்டு என் வழியை நான் தேர்ந்தெடுத்துக் கொண்டு டாக்டர். சுந்தரபாண்டியன், டாக்டர். ஆஸ்மா மற்றும் டாக்டர். வினோதினி ஆகியோரின் வழிகாட்டுதலுடன் எனது படிப்பை தொடர்ந்தேன். இவர்களின் சேவை பாராட்டத்துக்குரியது. இரண்டாம் ஆண்டில் டாக்டர். தங்கராஜ் எங்களை டெல்லி, ஹைதராபாத், மணாலி போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றார். பெரும்பாலான மருத்துவர்கள் உடன் நானும் சென்றேன். அப்போதுதான் கோவிட்–19 பெருந்தொற்று வந்தது. அந்த நேரத்தில் டாக்டர்கள் ஒருபுறம் நோயாளிகளின் தேவைகளை கவனித்துக் கொண்டார்கள்; அதை மறுபுறம் நாங்கள் கவனித்துக் கொண்டிருந்தோம். உண்மையைச் சொல்வதென்றால் அந்த கடினமான காலகட்டத்தில் எங்கள் வாழ்க்கை ரோலர் கோஸ்டர் போல தான் இருந்தது. நான் தூக்கமில்லாமல் பல இரவுகளை கடந்தேன். நாங்கள் தொடர்ச்சியான பல முயற்சிகள் செய்ய வேண்டி இருந்தது. நோயாளியின் வாழ்க்கையில் நான் ஒரு முக்கிய பங்கு வகித்தேன் என்பதில் பெருமை அடைகிறேன்.

என்னை பொறுத்தவரை எஸ்.ஆர்.எம்.கல்லூரி என்பது இருட்டு அறையில் இருந்த ஒரு மெழுகுவர்த்தி போன்றது. அந்த அறையில் உள்ள அனைவருக்கும் மெழுகுவர்த்தி வெளிச்சம் தருகிறது. என் வாழ்வில் மறக்க முடியாத நினைவுகளுடன் என் வாழ்க்கையில் அடுத்த கட்டத்திற்கு முன்னெறிச் செல்லும் நோக்கத்துடன் என் பணியைச் மிகவும் மன நிறைவுடன் செய்து வருகிறேன். என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிய எஸ்.ஆர்.எம். மருத்துவக்கல்லூரிக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

## மருத்துவ முகாம் மற்றும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை போட்டி





மருத்துவமுகாம் புகைப்படங்கள்



கட்டுரைப்போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்ட காட்சி

புதிய தலைமுறை அறக்கட்டளையின் வள்ளியம்மை அம்மாள் மருத்துவ உதவித்திட்டத்தின் மூலம் செங்கல்பட்டு மாவட்டம் ரெட்டிபாளையம் கிராமத்தில் உள்ள சமுதாயக்கூடத்தில் 15 டிசம்பர், 2022 அன்று மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மொத்தம் 114 நபர்கள் கலந்து கொண்டனர்.

பெண்கள் 68சதவீதம், ஆண்கள் 22 சதவீதம், சிறுவர் சிறுமியர் 10 சதவீதம். இதில் கண் சிகிச்சை 42 சதவீதம், முட்டி கால் வலிக்காக 32 சதவீதம், சத்து குறைபாடு உள்ளவர்கள் 18 சதவீதமும், சர்க்கரை நோய்க்காக 8சதவீதம் பேரும் சிகிச்சை பெற்றனர்.

ரெட்டிபாளையம் கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சுற்றுப்புற ஆரோக்கியம் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் 18 மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும், சிறப்பாக கட்டுரை எழுதிய மாணவர்களில் ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த மருத்துவ முகாமில் ரெட்டிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் சந்தியா செந்தில், துணைத் தலைவர் சந்தானமும், பள்ளியின் ஆசிரியர் P.தாமஸ், புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் திரு.D.V.வெங்கடகிரி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழும் வழங்கினார்கள்.

எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் இருந்து டாக்டர். பிரதீப் தலைமையில் மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கினர்.

# ஸ்மையில்ட்ரெயின் (SMILETRAIN)
# உதடு / உள் அண்ணம் பிளவு



டாக்டர். M. பசுபதி
இயக்குநர்,
Smile Train Project
& Sr. Consultant

**உதடு பிளவு:** மேல் உதடு பிளவு என்பது மேல் தாடை எலும்புகள் மற்றும் மேல் உதடும் ஈறும் பிளவுபட்டிருக்கும். **உள்அண்ணம் பிளவு:** பிளவு பட்ட அண்ணக் கோளாறு என்பது உள்வாயின் மேல் பகுதி பிளவுபட்ட நிலையில் காணப்படும்.

**உதடு மற்றும் உள் அண்ணப் பிளவுக்கான காரணங்கள்**

- பெற்றோரின் மரபணுக்களில் ஏற்படும் கோளாறு.
- கர்ப்பகாலங்களில் தாயின் நலம் முறையாக பேணப்படாமல் இருத்தல்.
- கர்ப்பகாலத்தில் தாய்க்கு உடல்நலக்குறைவு ஏற்படுதல்.
- வேறு பலகாரணங்களினாலும் இவ்வகை கோளாறுகள் ஏற்படலாம்.

**உதடு மற்றும் உள்அண்ணப்பிளவு உள்ளவர்கள் சந்திக்கும் நடைமுறை வாழ்க்கைப் பிரச்சனைகள்**

- குடும்பம் மற்றும் சமுதாயத்தினரால் ஒதுக்கப்படுதல்.
- சரியாக திரவ, திட உணவு உட்கொள்ள முடியாமை.
- முறையான உடல்வளர்ச்சி பாதிக்கப்படுதல்.
- சரியாக பேச முடியாமை.
- பள்ளிக்குச் செல்ல மறுத்து வெட்கப்பட்டு நின்றுவிடுதல்.
- மூளைவளர்ச்சி குன்றியவர்கள் என்று சமுதாயம் புறக்கணிக்கும்.
- காதில் சீழ்வடிதல்.
- கேட்கும்திறன் குறையும் தன்மை.
- தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதனால் தனிமையில் ஒதுங்கிவிடுவர்.
- வேலை மற்றும் திருமண வைபவங்களில் தடைகள் ஏற்படும்.

எஸ்.ஆர்.எம். மருத்துவ குழுவில் கீழ்கண்ட துறைகளில் பிளாஸ்டிக் சர்ஜரி. வாய் மற்றும் முகசீரமைப்பு, பல்மருத்துவம், குழந்தை நலமருத்துவ துறை, காது, மூக்கு, தொண்டை மருத்துவம், இருதய அறுவை சிகிச்சை நிபுணர், மன நலஆலோசனை, மயக்க மருந்து மருத்துவம் மற்றும் பேச்சு மற்றும் மொழிபயிற்சி போன்றவற்றில் திறமையான மருத்துவ நிபுணர்கள் உள்ளனர்.

**இலவச அறுவை சிகிச்சையின் சிறப்பு அம்சம்:** அமெரிக்காவில் உள்ள ஸ்மைல்ட்ரெயின் நிறுவனத்தின் மருத்துவ தரக்கட்டுப்பாடு அளவு கோலாக கடைப்பிடிக்கப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற மருத்துவ வல்லுநர்களின் தணிக்கை, கண்காணிப்பு மற்றும் மருத்துவக் குழுவாக ஆலோசனை வழங்கப்படும்.

இலவச அறுவை சிகிச்சையின் போது சளி பிடித்திருக்கக்கூடாது, இரத்தத்தில் ஹீமோகுளோபின் 10 கிராம் இருக்கவேண்டும், 3 மாதத்திற்கு மேற்பட்ட குழந்தையாக இருப்பின் உடலஎடை 5 கிலோவுக்கு மேல் இருக்கவேண்டும்.

**உலகத்தரம் வாய்ந்த அறுவை சிகிச்சை மூலம் உதடு மற்றும் உள் அண்ணப்பிளவு எஸ்.ஆர்.எம் மருத்துவகல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம், காட்டாங்கொளத்தூரில் முழுவதுமாக குணப்படுத்தப்படும்.**

- 3 மாத குழந்தை முதல் அனைத்து வயதினருக்கும் இலவச அறுவை சிகிச்சை அளிக்கப்படும்.
- உதடு /உள் அண்ணம் பிளவு பட்டோருக்கு எல்லா நாட்களிலும் 24 மணிநேரமும் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. 24 மணிநேர செவிலியர்கள் சேவை.
- தனி மருத்துவப்பிரிவு உள்ளது.
- அறுவை சிகிச்சைக்கு பிறகு பேச்சுப்பயிற்சி.
- தொடர்ந்து சரியாகும் வரை மருத்துவ நிபுணர்மூலம் பேச்சுப்பயிற்சி.
- உதடு /உள்அண்ணம் பிளவு பற்றிய மருத்துவ தகவல்கள் மற்றும்
- மருத்துவ ஆலோசனைகளை பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் அளிக்க தனியாக பிரிவு உள்ளது.
- இலவச உணவு வழங்கப்படும். இத்துடன் ஏழை நோயாளிகளுக்கு பயணச் செலவும் வழங்கப்படுகிறது.



**டாக்டர் Lt. Col. அ. ரவிக்குமார்**
சார்பு துணைவேந்தர்,
SRM மருத்துவ
சுகாதார அறிவியல் துறை, பொத்தேரி



**டாக்டர். T. மைதிலி**
கூடுதல் பதிவாளர்
எஸ்.ஆர்.எம். மருத்துவ சுகாதார
அறிவியல் கல்லூரி, பொத்தேரி



**டாக்டர். அ. சுந்தரம்**
டீன் (மெடிக்கல்),
SRM மருத்துவ கல்லூரி
மற்றும் அறிவியல் துறை
ஆராய்ச்சி மையம், பொத்தேரி



**டாக்டர். ஆர். பாலமுருகன்**
மருத்துவக் கண்காணிப்பாளர்
SRM மருத்துவக் கல்லூரி,
பொத்தேரி






எஸ்.ஆர்.எம். மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர்

**இலவச அறுவை சிகிச்சை மற்றும் விவரங்களுக்கு**
**திட்ட இயக்குனர், ஸ்மைல்ட்ரெயின்**
**உதடு உள்அண்ணம் பிளவு சீரமைப்பு மையம் ஒட்டுறுப்புஅறுவை சிகிச்சைதுறை (பிளாஸ்டிக்சர்ஜரி),**
**எஸ்.ஆர்.எம். மருத்துவகல்லூரி மருத்துவமனை & ஆராய்ச்சி மையம் பொத்தேரி, காட்டாங்கொளத்தூர்,**
**செங்கல்பட்டு -603 203. மருத்துவமனை எண்: 044-6700 0000**
**Extension: 2334. MOBILE: 94479 69991**

## குணமடைந்து விட்டேன் !


சிகிச்சைக்கு முன்


சிகிச்சைக்கு பின்

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த இந்த 1 வயது சிறுவன் உதடு பிளவு மற்றும் அண்ணம் பிளவுடன் பிறந்துள்ளான். இந்த பிறவி குறைபாட்டை சரிசெய்வதற்காக, உதடு பிளவு மற்றும் அண்ணப்பிளவு அறுவை சிகிச்சைக்கான சிறப்பு SRM மையத்தில் சேர்ந்தான்.

பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையின் ஸ்மைல் ட்ரெயின் திட்டத்தில் சமூக பொருளாதாராத்தில் மிகவும் பின் தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தையை நாங்கள் உடனடியாகச் சேர்த்துள்ளோம், மேலும் பிளவு உதடு மற்றும் பிளவு அண்ணம் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை மூலம் அவரது தோற்றத்தையும் செயல்பாட்டையும் முழுமையாக இயல்பாக்கினோம்.


அந்த சிறுவனின் பெற்றோருக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மிகவும் திருப்திகரமாக இருந்தது.

## பாராட்டுவோம் ! பரிசளிப்போம்.....!

செப்டம்பர் / அக்டோபர், 2022 வள்ளி மருத்துவ செய்தி மடலில் வெளிவந்த வினாடி வினாவில் வெற்றிபெற்றவர்களின் விவரம்

சமூக மருத்துவம் மற்றும் நல்ல ஆரோக்கிய தூதர்கள்


செந்தில்
சிங்கப்பெருமாள் கோவில்


அனுஷிலிவா
கூடலூர்


ஆண்டனி போர்ஷனின்
மறைமலை நகர்


ராஜ்குமார்
கூடுவாஞ்சேரி

### முதலுதவி - வயிற்றுப்போக்கு

1. குறுகிய இடைவெளியில் நீர் போன்ற மலம் வெளியேறினால் அதுதான் வயிற்றுப்போக்கு. ஃபுட் பாய்சன் (Food Poison) போன்ற உணவு காரணங்களால் மட்டுமின்றி காய்ச்சல், பாக்டீரியா, வைரஸ் தொற்றுகளாலும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம் .

2. வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் உடலில் முதலில் ஏற்படும் பிரச்சனை நீர் சத்து குறைதல் அதனால் வெந்நீர் காய்ச்சி ஆறவைத்து நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும் .

3. மருந்து கடைகளில் கிடைக்கும் எலக்ட்ரோல் குளுக்கோஸ் ORS கரைசல் வாங்கி வந்து சீரான இடைவெளியில் பருக வேண்டும்.

4. உடனடியாக தக்க மருத்துவரை அணுகி தக்க ஆலோசனை பெற வேண்டும்.

**வள்ளியம்மை அம்மாள் மருத்துவ உதவித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள்**

தொடர்புக்கு

ஏ.ஆர். ரமேஷ் கண்ணன் - 72009 53299 | ஈ. மணிராஜ் - 87544 17400

அச்சிட்டு வெளியிடுபவர்:
து.வே.வெங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை




டாக்டர் : நீங்க தினமும் ஹோட்டல சாப்பிடரதால தான் உங்களுக்கு "அல்சர் " வந்திருக்கு.

நோயாளி: அப்படினா இனிமேல் பார்சல் வாங்கி வீட்ல சாப்பிடுறேன் சார்.....

********

ஒருவர்: அவர் குழந்தைகளை கவனிக்கிற டாக்டருன்னு எப்படி கண்டு பிடிச்சீங்க ?

மற்றவர்: மம்மு சாப்பிடறதுக்கு முன்னாடி இந்த மருந்தையும் மம்மு சாப்பிட்ட பிறகு இந்த மருந்தையும் சாப்பிடுங்கன்னு சொன்னாரே....

********

டாக்டர்: உங்கள் கணவர் பூர்ண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். தூக்க மாத்திரைகளை பெற்றுக்கொள்ளுங்கள்..

மனைவி: அவருக்கு எத்தனை மாத்திரை தர வேண்டும் ?

டாக்டர்: மாத்திரை அவருக்கல்ல, உங்களுக்கு !!!

### நீங்களும் ஆகலாம் வள்ளி ஆரோக்கிய தூதர்

VALLI HEALTHCARE AMBASSADOR
புதிய தலைமுறை அறக்கட்டளை
வள்ளி
வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித்திட்டம்
SRM மருத்துவமனை, பொத்தேரி சிறப்பு சிகிச்சைத் திட்டம்
வள்ளி ஆரோக்கிய தூதர்

அன்பான வள்ளி செய்தி மடல் வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள். தங்கள் பகுதியில் மருத்துவ சேவை புரிய ஆர்வம் உள்ளவர்கள் இந்த நம்பரை தொடர்பு கொள்ளுங்கள்

**9944544299**